# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 30 February 2017 Issue - 2

நிறுவன ஆசிரியர் உரை

## வாழ்க்கையின் துயரங்களோடு கர்த்தரைச் சேவித்தல்

**ந**ம்முடைய வாழ்க்கையில் இருக்கிற குறைவுகள், ஏற்படுகிற துன் பங்கள் அநேக சமயங்களில் நம்மைச் சோர்வடையச் செய்து வாழ்க்கை யைக் கசப்பாக்கிவிடுகிறது. நமக்குத்தான் ஊரில் இல்லாத துன்பங்களும், பிரச்சனைகளும் இருக்கின்றன. மற்றவர்கள் எல்லாம் எவ்வளவோ மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் தேவபக்திக்குரிய காரியங்களை இகழ்ந்தும், அசட்டை செய்தும் தங்கள் இச்சைகளுக்கேற்ற படி வாழ்கிறார்கள். சொத்து மேல் சொத்து சேர்கிறது. எடுத்த காரியங்களை வெற்றியோடு முடிக்கிறார்கள். சர்வமும் நிறைந்து காணப்படுகிறது என்றெல்லாம் எண்ணி, நாம் கடவுளைப் பற்றிக் கொண்டிருப்பதால் என்ன நன்மையைக் கண்டடைந்தோம் என்று புலம்புகிறோம். தயவு செய்து 73 ம் சங்கீதத்தை ஜெபத்துடன் வாசித்துச் சிந்தியுங்கள்.

வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்கள், துன்பங்கள் யாவுமே தீமையான வைகள் என்று ஒட்டுமொத்தமாக நினைத்துவிடக் கூடாது. பூச்சி, புழுக்கள் எல்லாம் பயிர்களை அழித்து நாசம் செய்து விடுகின்றன என்று பொதுவாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சில வகைப் புழுக்கள் பயிர் களுக்கு மிகவும் உபயோகமான பணிகளைச் செய்கிறதாக விவசாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, சில துன்பங்களும், கஷ்டங்களும் வாழ்க்கையில் நாம் வெற்றி அடைவதற்கு இன்றியமையாதவைகள் என்று

அறிந்து ஆறுதல் அடைய வேண்டும்.

நம்முடைய வாழக்கையைச் செம்மைப்படுத்துவதற்கு தேவன் சில வேளைகளில் நம்மைச் சிட்சிக்க வேண்டியிருக்கலாம். ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணர் தன் நோயாளிகளில் ஒருவரைப் பார்த்து நான் உம்மைக் காயப்படுத்தவேண்டி வரலாம். ஆனால், உம்மை வேதனைப்படுத்த மாட்டேன் என்றாராம். ஆம், நம்மைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தேவன் நம்மைக் காயப்படுத்த நேரிடலாம். ஆனால், நிச்சயமாக வேதனைப்படுத்த மாட்டார். இதை எபிரெய ஆசிரியர் விளக்கும் போது, **அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாக அடங்கி நடக்க வேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும், பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்** என்கிறார். (எபி 12 : 9 – 11) சிட்சையை அதாவது, கடிந்து கொள்ளுதலை எல்லாருமே விரும்புவதில்லை. ஆனால், அது கர்த்தருடைய பரிசுத்தத்துக்கு நம்மைப் பங்காளியாக்குகிறதே.

நமக்கு நேரிடும் சோதனைகளைக் குறித்து பேதுரு கூறும்போது, **அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க் கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக் கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்** என்கிறார் ( I பேதுரு. 1: 7).

நாம் கிறிஸ்துவுக்காகப் படுகிற துன்பங்கள் ஒரு போர் வீரன் யுத்தத்தில் பெறும் விழுப்புண்களுக்குச் சமமானது. அப்போஸ்தலன் பவுல் கலாத் தியருக்கு எழுதும் போது **இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக் காதிருப்பானாக ; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்** என்று கூறுகிறார். (கலா 6 : 17) தான் கிறிஸ்துவுக்காகப் பாடுபட்டதினால் ஏற்பட்ட தழும்புகளை மன தில் கொண்டு இப்படி எழுதுகிறார். பழைய ஏற்பாட்டில் யோனாவின் எட்டு வார்த்தைப் பிரசங்கம் நினிவே பட்டணத்து மக்களையும், அரசனையும் உலுக்கியதே, அதற்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? யோனா

திமிங்கலத்தால் விழுங்கப்பட்டபோது அதன் செரிமான அமிலத்தால் அவன் கூழாகாமல் தப்பின விந்தை அவர்கள் காதுகளுக்கு எட்டியிருக் கலாம். அல்லது அவன் மூன்று நாட்களுக்குப் பிறகு கடற்கரையில் திமிங் கலத்தால் வாந்தி பண்ணப்பட்டதை அப்பட்டணத்தாரில் எவராவது ஒருவர் பார்த்து விட்டுப் போய் அதை ராஜாவிடம் அறிவித்திருக்கலாம். நமக்குச் சரியாய்த் தெரியவில்லை. ஆனால், ஒன்று நிச்சயம். அவனுடைய வாழ்க்கையில் நடந்த இந்த அற்புத சம்பவமும், அதனால் அவன் அடைந்த துன்பங்களும் அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமும் தான் அந்த மக்களை மனம்திரும்ப வைத்தது என்று துணிந்து கூறலாம். துன்பத்தைப் பற்றி நமக்குப் பட்டறிவு இல்லாமல் மற்றவர்களைத் தேற்றுவதும், மாற்றுவதும் எப்படி? ஆகவே, நமக்கு ஏற்படும் துன்பங்களையும் பாடுகளையும் கண்டு துவண்டு போகக்கூடாது.

சில பேர், குறிப்பாகப் பெண்கள் தாங்கள் அழகாக இல்லையே! என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். புற அழகை விட நற்குணமே சிறந்தது. அழகுள்ளவர்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று எண்ணி விடக் கூடாது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு பேரும், புகழும் பணமும் படைத்த ஒரு சினிமா நடிகை தற்கொலை செய்து கொண்டதாக செய்தித் தாள்களில் வாசித்தேன். அவளுடைய அழகும், பேரும். புகழும், பணமும் அவளுக்கு வாழ்க்கையில் நிம்மதியைத் தரவில்லை என்பது தானே அவள் அகால மரணம் கூறுகிற சோகக் கதை. ஆகவே, புற அழகை விரும்பி, அதில் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டு அக அழகைப் புறக்கணிக்கலாகாது என்று அப்போஸ்தலன் பேதுரு அறிவுரை கூறுகிறார். **மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது** என்கிறார் (I பேதுரு 3 : 24). நீதி மொழிகளிலும் **சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது ; அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் என்று** அழகின் மாயையையும், புத்தியில்லாமல் வெறும் அழகாக மட்டும் இருக்கிற பெண்களை ஒப்பிட்டு கூறும்போது **பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்** என்று இடித்துரைக்கிறது (நீதி 11 : 22).

நமக்கு அடுக்கடுக்காய் உபத்திரவங்கள் வரும்போது யோபுடைய மனைவியின் மனநிலை ஏற்பட்டு விடுகிறது (யோபு 2 : 9). ஆனால், அதை

முயன்று வென்று, யோபுவின் மனநிலைக்கு வரப் பிரயாசப்பட வேண்டும். (யோபு 2 : 10 ) பல நூற்றாண்டுகளாகியும் யோபின் சகிப்புத் தன்மையும் பொறுமையும் பலராலும் பாராட்டப்படுகின்றன ( யாக் 5 : 11). உபத்திரவம் வளர்த்துவிடும் சில நற்பண்புகளைப் பற்றி அப்போஸ்தலன் பவுல் கூறு வதைக் கேளுங்கள். **உபத்திரவம் பொறுமையையும், பெறுமை பரீட்சை யையும் ( மனத்தின்மை ), பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்கு கிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டு கிறோம்** என்கிறார் (ரோமர் 5 : 3 – 4).

மனிதனுடைய இயலாமையே கர்த்தர் கிரியை செய்வதற்கு உரிய பக்குவமான பதம் என்று நாம் அறிய வேண்டும். இயேசு அப்போஸ்த லனாகிய பவுலிடம் கூறியதைக் கவனியுங்கள். **என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும் என்கிறார்** ( II கொரி 12 : 9 ). அதனால் பவுல் ஆறுதல் அடைந்து **அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும் துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப் படுகிறேன்** ( II கொரி 12 : 10 ). தேவன் பலவீனமுள்ளவரோடு சேர்ந்து பணியாற்ற விரும்புகிறார். உங்களுடைய பலவீன நிலையே தேவன் பெரிய காரியங்களைச் செய்வதற்காக உங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற பக்குவமான நிலையாக இருக்கலாம்.

சிலருக்குத் தாங்கள் ஐசுவரியவான்களாக இல்லையே என்ற மனக் குறை உண்டு. சகோதரர்களே, ஐசுவரியம் வஞ்சனையுள்ளது. பல நற்பண் புகளை அடகு வைத்துத்தான் ஒருவன் செல்வந்தனாக முடியும். ஆகவே, செல்வம் சேர்க்கும் ஆசையே கூடாது. அமெரிக்காவில் **ஈவர்க்குயூகர்** என் றொரு மிகப்பெரிய பணக்காரன் வாழ்ந்தானாம். வங்கிகளை ஏமாற்றியும், வேறு பல மோசடி வேலைகளிலும் ஈடுபட்டும் கோடிகணக்கில் பணம் சேர்த்தானாம். நாள் ஒன்றுக்கு பல மில்லியன் டாலர்கள் வருமானம் வந்ததாம். அவன் காலத்தில் உலகில் எந்த ஒரு பகுதியிலும் அவனை விட அதிக வருமானம் பெறக் கூடிய நபர் வேறு எவரும் இல்லை என்று ஊரே பேசிக் கொண்டது. ஆனால், அவனோ பல இரவுகளைத் தூக்கமில்லாமல் கழித்து இறுதியில் தற்கொலை செய்து மாண்டு போனான். என்னே பரிதாபம்! பிரசங்கி இதைக் குறித்து எவ்வளவு தெளிவாய் சொல்லி யிருக்கிறார் என்று பாருங்கள். **தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக் கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார் ;**

**பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்து விட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்** ( பிர 2 : 26 ). இதையெல்லாம் மனதில் கொண்டு தான் பவுல் அடியார் கூட **போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்றும், பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது ; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்** என்று அறிவுறுத்தி எச்சரிக்கை செய்கிறார் ( I தீமோ 6 : 6, 10.)

இறுதியாக நீங்கள் உண்மை மனதோடு ஆண்டவருடைய பணியில் ஈடுபடும் பொழுது மாயம்பண்ணி பொருளாசையுடையவர்களாய் மனிதரைப் பிரியப்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுகிற கள்ளசகோதரர்களிடமிருந்து பலவிதமான எதிர்ப்புகள் வரக்கூடும். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியபட்டுக் கலங்க வேண்டியதில்லை. இது இன்றைக்குப் புதிதாக முளைத்த பிரச்சனை அல்ல. காலமெல்லாம் தொடர்ந்து நடைபெறுகிற சாத்தானின் திருவிளையாடல்கள் தான். மாறாக, இவைகளைச் சிந்தித்துப் பொறுமையோடு இவைகளை மேற்கொள்ள நாம் முயற்சிக்கும் போது நீடிய சாந்தமும் பொறுமையும் நமக்கு ஏற்படுகிறது. கர்த்தரின் சகோதரனாகிய யாக்கோபு இதைப்பற்றிச் சொல்லும்போது **என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது என்று கூறுகிறார்** ( யாக் 1 : 2 - 4 ). சிலவேளைகளில், நாம் பரம இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்கு உரிய சில தகுதிகளை அடைவதற்கு சோதனைகள் உதவியாக இருக்கின்றன என்கிறார். பேதுரு கூறுவதைக் கவனியுங்கள். **கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்ச காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக** என்கிறார் (I பேதுரு 5 : 10).

வாழ்க்கையில் நமக்கு நேரிடுகிற கஷ்டங்களும் துன்பங்களும் நமக்கு நன்மையே செய்கின்றன. ஒவ்வொரு குறையும் நம்மைக் கடவுள் பக்கமாக இழுத்துச் செல்லுகிறது. கிறிஸ்துவினிமித்தம் நமக்குப் பலவிதமான

நிந்தைகள், ஏன் மரணமே சம்பவிப்பதாயிருந்ததாலும் நாம் நீடிய பொறுமையோடு அவற்றைச் சகித்துக் கொள்வது கர்த்தருக்குப் பிரியமான பண்பு என்று கிறிஸ்தவ நெறி நமக்குப் போதிக்கிறது.

ஆகவே, நாம் செய்ய வேண்டியது, நம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஆறுதல் அடையப் பழகிக் கொள்ள வேண்டும். பலர் பல்வேறு நிலைகளிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாகும்படி அழைக்கப் பட்டிருக்கிறார்கள். அவரவர் நிலையில் உண்மையுள்ளவர்களாக மன அமைதலோடு கர்த்தருடைய பாதையில் பொறுமையோடே ஓட வேண்டும். கொரிந்து திருச்சபைக்கு பவுல் அப்போஸ்தலன் வரைந்த முதல் நிருபத்தின் 7 – ம் அதிகாரம் 17 முதல் 24 வசனங்களை வாசித்து அதன் கருத்தைச் சிந்தித்துத் தெளிவு பெறுவோமாக!

**E.Z. செல்வநாயகம்**

நமது, திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர், பெருமதிப்பிற்குரிய **சகோ. E.Z. செல்வநாயகம் ஐயா** அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்து 9. 2. 2017 – உடன் 24 ஆண்டுகள் நிறைவடைவதால் அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப் பட்டுள்ளது

# விசுவாச ஓட்டம்

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் ; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (II தீமோ. 4 : 7, 8).

# ஏன் நாங்கள் நியாயாத்தீர்ப்பில் விசுவாசம் வைக்கிறோம்?

Bro. J.C. சோட்

– தொடர்ச்சி

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது, **ஒரு நாள் வரும் அதிலே தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங் கங்களைக் குறித்து நியாயந்தீர்ப்பார்** என்றார் ( ரோமர் 2 : 16 ). எபிரெய எழுத்தாளர், **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக் கானதாயும் ஆத்துமாவையும்,ஆத்துமாவையும், ஆவியையும் கணுக் களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருத யத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும், இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை ; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாண மாயும் வெளியரங் கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்** என்று நமக்கு நினைவுப்படுத்துகிறார் ( எபிரெயர் 4 : 12, 13 ). இன்னும் பவுல், **ஆயினும், நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாய நாளின் விசாரனையினா லேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது ; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன் ; ஆயினும், அதனாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆத லால் கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள் ; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்** ( I கொரி. 4 : 3 – 5). மேலும் பவுல், நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிற வர்களையும், மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவரு டைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது (I தீமோ. 4 : 1) பவுல் தொடர்ந்து தம்மைப் பற்றி சொல்லும்போது, **இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதி பதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு**

**எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமா குதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்** என்றார் ( II தீமோத்தேயு 4 : 8 ). இங்கே பவுல் கர்த்தர் நீதியுள்ள நியாதிபதியாக இருந்து தனக்கு நீதியின் கிரீடத்தை அந்நாளிலே தந்தருளுவார் என்று சொல்கிறார். இங்கே, அந்த நாள் என்பது நியாயத்தீர்ப்பு நாளைக் குறிக்கிறது. மேலும் பவுல், அப்படிப்பட்ட கிரீடம் தனக்கு மாத்திரம் கிடைக்காமல், கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அல்லது அவருடைய வருகைக்காகத் தங்களை ஆயத்தமாக்கியிருக்கிற யாவருக்கும் கிறிஸ்து தருவார் என்றும் கூறுகிறார்.

எபிரெய எழுத்தாளர், **யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவன்** என்று கூறுகிறார் (எபிரெயர் 12 : 23). அதன் பின்பு, எபிரெயர் 13 : 4– ல் **விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாகமஞ்சம் அசுசிப்படாத தாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்** என்று சொல்கிறார்.

மத்தேயு 25 – ம் அதிகாரத்தில் கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். **அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்ததூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன், செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலப்பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடப்பக்கத்திலும் நிறுத்துவார்**. இங்கே கர்த்தர் ஒரு நாளில் நடக்கப்போகிற நியாயத்தீர்ப்பை சித்தரித்தக் காட்டுகிறார். இது அவருடைய வருகையின் போது நடைபெறும். அப்பொழுது எல்லா தேசத்தோரும் எல்லா ஜனங்களும் அவருக்கு முன்பாக நிற்பார்கள். அப்போது, அவர் ஒரு மேய்ப்பன் வெள்ளாடுகளையும், செம்மறியாடுகளையும் பிரிப்பது போல தீயவர்களிடமிருந்து நல்லவர்களைப் பிரிப்பார். அவருடைய வலது கை யில் இருக்கும் செம்மறியாடுகள் நீதிமான்களை, கிறிஸ்தவர்களைக் குறிக் கிறது. நியாயத்தீர்ப்பு முடிந்த பிறகு துன்மார்க்கர் அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களே நித்திய ஜீவனை அடை யவும் போவார்கள் என்றும் வேத வசனம் சொல்கிறது (மத்தேயு 25 : 46).

இப்போது, நாம் இதுகாறும் பார்த்தவைகளைத் தொகுத்து, நாம் எவைகளைக் கண்டறிந்தோம் என்று தயவு செய்து கவனியுங்கள்.

1. தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நாளிலே வருகிறது. ஆனால், அது

மரணத்திற்குப் பிறகு இருக்கும் அல்லது கர்த்தருடைய வருகையின் போது இருக்கும்.

2. அந்த மகா நாளில் எல்லோரும் இருப்பார்கள். இதுவரை வாழ்ந்த எல்லா மக்களும், இனிமேல் வாழப்போகிற மக்களும் அந்நாளில் அங்கே இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். ஒருவராலும் மறைந்து கொள்ளவோ அல்லது தப்பித்துக் கொள்ளவோ முடியாது. யாரும் கண்டு கொள்ளாமல் விடப்படமாட்டார்கள். இதில், இளம் வயதினரும், முதியோரும், நல்லோரும், தீயோரும், ஏழைகளும், பணக்காரரும், ராஜாவும், வேலைக்காரரும் என்று எல்லோரும் அடக்கம்.

3. தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார்.

4. அது ஒரு பாரபட்சமற்ற நியாயத்தீர்ப்பாய் இருக்கும். அதில் எல்லோரும் தங்கள் கிரியைகளின்படி, அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையானதாக இருந்தாலும் சரி, அதன்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

5. அந்த மகாநாளில், ஒவ்வொரு வெறுமையான வார்த்தையும், ஒவ்வொரு செயலும், அந்தரங்கமான ஒவ்வொரு யோசனையும் நியாயந்தீர்க்கப்படும்.

6. இந்த நியாயத்தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். அங்கே இரண்டாவது வாய்ப்புக்கு இடமேயில்லை. அது ஒரு நீதியுள்ள நியாயத்தீர்ப்பா யிருக்கும்.

7. அந்த நாளிலே, நீதிமான்களுக்கு நித்தியஜீவன் அளிக்கப்படும். துன்மார்க்கர் பிசாசின் நரகத்திலே நித்திய அழிவைப் பெறுவார்கள்.

நியாயத்தீர்ப்பிலே கர்த்தரை சந்திக்க ஆயத்தமாகிவிட்டீர்களா? கிறிஸ்து சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். **என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக் கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** (யோவான் 12 : 48). கிறிஸ்து இவ்விதமாகவும் சொன்னார். **மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே**

**வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய் யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதா வானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம் ; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந் திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை ; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன் ; எனக்குச் சிந்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமா னதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயயிருக்கிறது** (யோவான் 5 : 25 - 30).

என் நண்பர்களே, நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து இயேசுவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம், நீங்கள் இந்த நியாயத்தீர்ப்பின் மகா நாளுக்காக ஆயத் தமாக முடியும். அதைச் செய்யும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அதன்பின்பு, ஒரு கிறஸ்த வனாக கர்த்தரைச் சேவித்து, அவருக்கு மரணபரியந்தம் உண்மையுள்ள வர்களாயிருந்தால், ஒரு நாளில் அவருக்கு முன்பாக நிற்கும்போது, கர்த்தர் உங்களைப் பார்த்து, நல்லது, உத்தமும், உண்மையுள்ள ஊழியக் காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்று சொல் வதை உங்களால் கேட்க முடியும். அது எவ்வளவு அருமையானதாக இருக்கும்? இது குறித்து யோசித்துப்பாருங்கள். இன்னும் உங்களுக்கு நேரமும் வாய்ப்பும் இருக்கும் போதே அதற்காக உங்களை ஆயத்த மாகுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்படியாக நாங்கள் ஜெபிக்கிறோம். ●

## மனதின் பாவங்கள்

- தீமையான எண்ணங்களைப்பற்றிய கேடான மனது (மத். 5 : 27, 28)
- சுயமதிப்பைப்பற்றிய மேட்டிமையான மனது (ரோமர் 12 : 16)
- அவிவாசத்தைப்பற்றிய சந்தேகிக்கும் மனது (லூக்கா. 24 : 38)
- கவலைகளைப் பற்றிய சிந்திக்கும் கவலையுள்ள மனது (லூக்கா. 12 : 29)
- பறிக்க நினைக்கும் சுயநலமான மனது (லூக்கா 12 : 17, 21)

பெண்கள் பகுதி

# " ஆத்தும ஆதாயம் செய்கிறவன் ஞானவான் "

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையானவர்களே! தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நம் அனைவருக்கும் ஒரு பணி இருக்கிறது. எல்லோருக்கும் பரலோகம் செல்ல வேண்டும் என்ற ஆசை இருக்கிறது; நல்லது. ஆனால், தனி ஆளாகப் பரலோகம் சென்று விடலாம் என்று முயற்சிக்கிறோமா? அது ஒருபோதும் நடக்காது. கிறிஸ்துவின் சபைகளிலே சுவிசேஷக் கூட்டங்கள், வேதாகமக் கருத்தரங்கங்கள், வாலிபர், சிறுவர் முகாம் என்று பலவிதமான கூட்டங்கள், நடந்து கொண்டுள்ளன. நல்லது. அவைகள் அவசியம்தான். ஆனால், அவைகளை விட அத்தியாவசியமான ஒன்றாக தனிநபர் ஊழியம் காணப்படுகிறது. முதல் நூற்றாண்டு சபை வெற்றிகரமாக வளர்ந்ததற்கும், இன்று காணப்படும் தேக்க நிலைக்கும் காரணம் என்னவென்று பார்க்கும் பொழுது, ஏதோ ஒன்றை நாம் இழந்திருக்கிறோம் என்பது தெரியும். கட்டாயமாக உபதேசத்திலோ, வசனத்திலோ எந்தவொரு மாற்றமுமில்லை. தனிநபர் அர்ப்பணிப்புதான் காணாமல் போயிருக்கிறது. நம்முடைய இரட்சிப்பு சரியாக இருந்தால் போதும், பிறர் எப்படியோ போகட்டும் என்ற எண்ணத்துடன் வாழ்கிறோம். நம்முடைய வேலைகள் பல வற்றையும் திட்டமிட்டுச் செய்கிறோம். வாகனங்களில் பல இடங்களுக்குப் பயணம் செய்கிறோம். ஆனால், சுவிசேஷத்தைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள எந்தவொரு முயற்சியும் எடுப்பதில்லை. ஆத்துமாவை ஆதாயம் செய்து கொள்ளுகிறவர்கள் ஞானவான்கள். (நீதி 11 : 30 ; தானி 12 : 3).

### I ஏன் நாம் தனி நபர் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும்?

இயேசு கிறிஸ்து அப்படிச் செய்தார். வெகு ஜனங்களோடு பிரசங்கம் செய்தது பற்றி 16 இடங்களில் மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற வைகள் எல்லாம் தனி ஆட்களோடு செய்த உரையாடல்கள் தான். (யோ. 3 : 1 – 13 ; 4 : 1 – 26). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகத்தின் போக்கு முழுவதையும் மாற்றுவதற்காக வந்தார். அதற்காக அவர் அதிகம் பயன் படுத்திய முறை தனிநபர் ஊழியம்தான். அவர் தம்முடைய அடிச்சுவடு களைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியைப் பினவைத்துப் போனார். (Iபேது 2 : 21). நாம் அனைவருமே தனிநபர் ஊழியம் செய்ய வேண்டியது

எதிர்பார்க்கப்படுகிறது. மட்டுமல்ல, அது ஒரு கட்டளையாகவே உள்ளது (மத் 28 : 19 ; II தீமோ 2 : 2 ; I பேது : 3 : 15). நமக்குப் பதிலாக வேறு யாரோ இதை செய்யட்டும் என நினைக்கக் கூடாது. **யாரையாவது செய்யச் சொல்லி சொல்லுங்கள்** என்ற மனநிலையை தவிர்க்க வேண்டும். பிரதான கட்டளை நிறைவேற்றப்பட வேண்டுமானால் தனி நபர்கள் தங்களை இதில் ஈடுபடுத்த வேண்டும்.

மேலும், நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள இது மிகவும் துணை செய்கிறது. பிறருடைய ஆத்துமாவை ஆதாயம் செய்வதென்பது அந்த நபருக்காக நாம் என்னதான் வேலைகளையும், முயற்சிகளையும் உதவி களையும், செய்தாலும் அதைவிட சிறந்த ஒன்றாக இது இருக்கிறது (மத் 16 : 26). நாம் பிறருடைய ஆத்துமாக்களுக்கு கடனாளியாயிருக்கிறோம். (ரோமர் 1 : 14 – 15). இதற்காகத்தான் கிறிஸ்து பூமிக்கு வந்தார் (லூக். 19 : 10). இன்னும், இதற்காகத் தான் கிறிஸ்துவின் நற்செய்தி நம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

### II **தனி நபர் ஊழியத்தின் அனுகூலங்கள்**

இதற்கென்று குறிப்பிட்ட வயதோ, திறமையோ, கல்வியோ, முக்கிய மில்லை. பொதுவான இடங்களுக்குச் சென்று பாடல் பாடவும், பிரசங் கிக்கவும் அனைவராலும் முடியாது. ஆனால், தனியாக, தனி ஆட்களை சந்தித்து அவர்களுக்கு நம் விசுவாசத்தைப் பகிர்ந்து, வசனத்தை போதிப்பது எளிது. ஒரு வாகனத்தை சரி செய்வது, பலகாரம் ஒன்றை எப்படிச் செய்வது, ஒரு செடியை எப்படி வைத்து வளர்ப்பது என்பதை யெல்லாம் அயலகத் தாருக்கு சொல்லிக் கொடுக்க நமக்குத் தெரிந்திருக் கும்போது, இரட்சிக் கப்பட என்ன செய்ய வேண்டும். என்பதை பகிர்ந்து கொள்வது கஷ்டமான விஷயம் அல்ல. கடைசிக்கு நாம் என்னென்ன பக்திக் காரியங்களை செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சொன்னாலே போதும். சிலருக்குப் புத்தகங்கள் வெளியிடுவது, கைப் பிரதிகள் அடித்து விநியோகிப்பது, வானொலி, தொலைக்காட்சி, இவைகளில் பிரசங்கிப்பது போன்ற வாய்ப்புகள் கிடைக்கிறது நல்லது. தனி நபர்களைச் சந்தித்து சுவிசேஷம் சொல்வதற்கு இதைவிட அதிக வாய்ப்புகள் கிடைக்கிறது. எப்படியென்றால், நம் வீட்டின் மருத்துவமனைகள், தொழிற்புரியும் இடம், வீடுகள், அலுவலகம், பள்ளிக் கூடம், பொழுதுபோக்கும் நேரங்கள், இப்படிப் பல தருணங்களைப் பயன்படுத்தி தனியாட்களுக்கு சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். பொதுவான ஊழியம், தனிநபர் ஊழியம், எதில்

ஆத்துமாவை கொள்ளைப் பொருளாக சம்பாதிக்க முடியுமென்றால் தனிநபர் ஊழியத்தில் தான். இதில்தான் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய விபரங்கள், அவர்கள் பிரச்சனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவைகளை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

III **தனி நபர் ஊழியம் செய்ய தேவையான தகுதியாம்சங்கள்**

ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனாக இருத்தல் அவசியம் (அப் : 1 : 1 ; ரோமர் 2 : 21 ; 2 தீமோ 2 : 2). செய்தியும் செய்தியாளரும் ஒத்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து லூக்கா : 19 : 41 ல் பார்க்கும்பொழுது, **அவர் சமீபமாய் வந்த போது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டார்.** என்று பார்க்கிறோம். பவுலும் இதைப் போன்றே (ரோமர் 9 : 3 ; 10 : 1; அப் 17 : 16) ஆகிய இடங்களில் ஆத்தும பற்றோடு ஊழியம் செய்தார். (யாத் : 32 : 31, 32 ) - ல் மோசே ஜனங்களுக்காக தேவனிடத்தில் கெஞ்சி மன்றாடுவதை வாசிக்க முடியும். இப்பேர்ப்பட்ட மனநிலை வேண்டும்.

தனி நபர் ஊழியத்தில் ஒரு தெளிவு அவசியம். சந்திக்கும் நபர்களின் வாழ்க்கை நிலை, தேவனுடைய கிருபை பாவிகளுக்காக எப்படி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது, கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை, எப்படி இரத்தம் பாவங்களைக் கழுவுகிறது. சுவிசேஷத்தின் வல்லமை, தேவனின் மன்னிக்கும் தன்மை, கிறிஸ்துவின் சபையின் தனித்தன்மை, இரட்சிப்புக்கான தேவனின் மெய்யான திட்டம். இவைகளைப் பற்றிய தெளிவு அவசியம். இம்மாதிரியான ஊழியப் பாணி இல்லாவிட்டால் கிறிஸ்துவின் சபையைக் கட்டவே முடியாது.

மேலும், அவன் புரிந்து கொள்ளுதல் உள்ளவனாக இருக்க வேண்டும். ஜனங்களை, சுவிசேஷத்தை, முதலாவது தானும் ஒரு புரிந்து கொள்ளுதலோடு இருக்க வேண்டும் (யோவான் 2 : 25, தீமோ : 2 ; 24 - 26). சூழ்நிலைகளைக் கையாளும் திறமை வேண்டும். (ஏசாயா : 50 : 4) மட்டுமல்ல, ஜெபத்தின் வல்லமையை அறுந்திருக்க வேண்டும். ஜெபம் பண்ணும் பழககமும் மிகவும் அவசியம் (ரோமர் 10 : 1 ; எபே. 6: 18, 19). செய்யாமல் ஊழியம் செய்வதென்பது தேவனுடைய உதவி எனக்கு வேண்டாம் என்று சொல்லுவதைப் போன்றது.

தனிநபர் ஊழியத்திற்கு விசுவாசம், தாழ்மை மிக, மிக அவசியம். அப்போஸ்தலரின் நாட்களில் பிலிப்பு இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

பிலிப்பைப் பார்க்கும்போது நல்ல அறிக்கை பண்ணுகிறவனாய் (அப் 6 : 3 - 5 ) நல்ல ஆவியுடையவனாய் ( அப் 6 : 3 - 5, கலா : 5 : 22, 23 ) வேதத்தையும் தன் ஆண்டவரையும் நன்கு அறிந்தவனாய் ( அப் : 8 : 35) கீழ்ப்படிதலுள்ளவனாய் ( அப் 8 : 29, 30 ) முயற்சி உள்ளவனாய் இருந்துள்ளான்.

ஆக, அருமையான சகோதரிகளே, மேலே வாசித்தவைகளைச் சிந்திப் போம். வெறுங்கையோடு தேவனைச் சந்திக்கச் செல்ல வேண்டாம். நியாயத்தீர்ப்பின் நாளிலே நம்மைப் பார்த்து தேவனும், இயேசுகிறிஸ்துவும் **என்னைப் பற்றி நீ எதுவுமே சொல்லவில்லையே!** என்று கேட்கும் வண்ணம் நாம் இப்பூமியிலேயே வாழ்ந்து விடக் கூடாது. எனவே, கர்த்தர் கிருபையாய்க் கொடுத்த இவ்வாழ்க்கையில் தனியாக, தனியாட்களுக்கு சுவிசேஷம் சொல்வோம், ஊழியம் செய்வோம், ஆத்துமாவை ஆதாயம் செய்வோம். **ஆத்துமாவை ஆதாயம் செய்கிறவன் ஞானவான்**. அப்படிச் செய்யக் கர்த்தர் இரக்கம் பாராட்டுவாராக! ஆமென்!! ●

---

## கிறிஸ்தவர்கள் எவைகளுக்காக ஜெபிக்க வேண்டும்?

☞ அரசாங்கத்தின் ஆளுமை அமைப்புக்காக (I தீமோ. 2 : 2).

☞ துன்பப்படுகிறவர்களுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் ( யாக். 5 : 13, 14).

☞ நம்முடைய அனுதின ஆகாரத்திற்காக (மத். 6 : 11).

☞ நம்முடைய சத்துருக்களுக்காக துன்பப்படுத்துகிறவர்களுக்காக (மத். 5 : 44).

☞ ஒருவரும் கெட்டுப் போகாமல் மனந்திரும்ப வேண்டுமென்று ( II பேதுரு 3 : 9).

☞ சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகாதபடிக்கு (யாக். 5 : 20).

☞ எல்லா மனுஷருக்காகவும் (I தீமோ. 2 : 1).

வாலிபர் பகுதி

# உயிருக்கு உத்தரவாதம்

சகோ. பென்னி மார்ட்டின்

பிரியமானவர்களே, பொதுவாக நாமெல்லோரும் தேவன் நமக்கு ஒவ்வொரு நாளைத் தரும்போது அடுத்த நாளையும் நாம் காணும்படி அவர் நமக்கு ஜீவனைத் தர வேண்டுமென்று வேண்டுகிறோம், ஏங்குகிறோம். வேறு விதமாகச் சொன்னால் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழ ஆசைப்படுகிறோம். அப்படி ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருப்பதை வேதாகமம் தவறு என்றோ, அல்லது பாவம் என்றோ கூறுவதில்லை. மாறாக, அதற்கென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிற காரியங்களைச் செய்ய வேண்டுமென்றே வலியுறுத்துகிறது, அறிவுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பேதுரு இது பற்றிச் சொல்லும்போது, **ஜீவனை விரும்பி நல்ல நாட்களை காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்கு தன் உதடுகளையும் விலக்கிக் காத்து பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி அதைப்பின் தொடரக்கடவன்** என்று புத்தி சொல்லுகிறார் ( I பேதுரு 3 : 10, 11)

இன்று நாம் உலகத்தை சற்று உற்றுப் பார்த்தால் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத ஓர் நிலைதான் காணப்படுகிறது. உலகில் எந்த ஓர் இடத்தையும் பாதுகாப்பானதாக, பத்திரமானதாக பார்க்க முடிவதில்லை. நாட்கள் நகர நகர நம்மைப் பதறவைக்கும் பல சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவன் நம்மைப் பராமரித்துப் பாதுகாத்து நம் வாழ்க்கைப் பயணத்தில் பல நாட்களை பரிசாகக் கொடுத்துக்கொண்டு வருகிறார். அவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். சரி, இப்போது I பேதுரு 3 : 10, 11 வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற கவனத்தைக் கவரும் இவ்வாக்கியத்தை கவனித்து கூடுதலான தகவல்களுக்காக அதை ஆராய்ச்சி செய்யாமல் பாராமுகமாக யாராலேத் தான் இருக்க முடியும்? வேறுவிதமாகச் சொன்னால், **அதிக நபர்கள் வாழ யார்தான் விரும்புவதில்லை? நல்ல நாட்களை யார் தான்**

**எதிர்நோக்குவதில்லை? இப்பாழாய்ப்போன உலகில் பெரும்பாலும் நாம் பெரும்பாடுகளைத்தான் பட்டுக் கொண்டிருக்கிறோம், பல்வேறுப்பட்ட நெருக்கடிகளுக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறோம், பல்வேறு காரியங்களால் கட்டுப்படுத்தப்படுகிறோம்.**

இன்று வாலிபர்கள், வயதானவர்கள், என்று எல்லோருமே ஆயுள் நாட்களை அதிகரிக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்கள். சமச்சீரான உணவு, உடற்பயிற்சி, தூக்கம் என்று எல்லா வற்றிலும் கவனம் செலுத்தினாலும் கவலை என்னும் அழையா விருந்தாளி, அதிக ஆயுசு நாட்கள் என்னும் கனவைக் கலைத்து விடுகிறது. அப்படியென்றால், ஆயுள் நாட்களை அதிகப்படுத்துவதற்கு என்னதான் வழி? என்னும் கேள்விக்குத் தீர்வாய், அருமருந்தாய் அமைவது தான் I பேதுரு 3 : 10, 11 வசனங்கள்.

I **வாழ்வை விரும்புதல்**

இவ்வுலகில் பலர் வாழ்க்கையை விரும்பாமல் இருப்பது துருதிஷ்ட வசமானது. வருடந்தோறும் லட்சக்கணக்கான மக்கள் தற்கொலையினால் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். மற்றவர்கள் அந்த அளவுக்கு போகாவிட்டாலும் கூட வாழ்க்கையை வெறுத்தவர்களாய், மகிழ்ச்சியற்றவர் களாய் வாழ்ந்து கொண்டிருப்பதை நம்மால் காணமுடியும். இதில் வேதனைப்படவேண்டிய, வெட்கப்படவேண்டிய விஷயம் என்னவென்றால், வாழ்க்கையே வெறுத்துவிட்டது என்று சொல்லுகிற கூட்டத்தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்களும் இருக்கிறார்கள் என்பதுதான். இப்போது நாம் வாழ்வை அல்லது ஜீவனை விரும்ப எவைகள் காரணிகளாக அமைகின்றன அல்லது எவைகள் நம்மை ஊக்கப் படுத்துகின்றன என்று பார்ப்போம்.

**முதலாவது** நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் ( ஆதி 1 : 27) நம் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க தேவன் இருப்பதால் ஜீவனை விரும்ப முடியும்.

**இரண்டாவதாக** நம் கண்ணீரைத் துடைக்க, நம்மை விசாரிக்க ( I பேதுரு 5 : 7 ), நம் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க தேவன் இருப்பதால் ஜீவனை விரும்ப முடியும்.

**மூன்றாவது,** நாம் மரணத்தைத் தழுவும்போது கூட ஜீவனை விரும்ப முடியும். ஏனென்றால், நம் சரீரம் ஒரு விதையைப்போல் மண்ணில் விதைக்கப்பட்டு கண்ணீரில்லாத கவலையில்லாத தேசத்தில் நாம் வாசம்

செய்ய முடியும் (வெளி. 21 : 4). நம் ஜனத்தாரோடே சேர்க்கப்படும் அந்த நாளை எதிர்நோக்க முடியும் (ஆதியாகமம் 25 : 8).

எனவே பிரியமானவர்களே! நாம் ஏன் இந்தப் பூமியில் பிறந்தோம் என்று வாழ்க்கையே வெறுத்தவர்களாய் பேசாமல், தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஜீவனை எண்ணி, வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் ரசித்து, ருசித்து கர்த்தருக்குள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவனுக்கு உடையர்களாகிய நாம் நம் சரீரத்தினாலும், நம் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (I கொரி. 6 : 20). பூமிக்குரிய கூடாரமாகிய நம் சரீரம் அழிந்து போனாலும், பரலோகத்தில் நமக்கு நித்திய வீடு உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் (II கொரி. 5 : 2).

II **நல்ல நாட்களைக் காணுதல்**

நல்ல நாட்கள் என்றால் என்ன? கெட்ட நாட்கள் என்றால் என்ன? பல வாலிபர்கள் வெளிப்புற சூழ்நிலைகளை அளவு கோலாக எடுத்துக்கொண்டு இது நல்ல நாள், இது கெட்ட நாள் என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டாலோ, புதிய உயரங்களைத் தொட்டுவிட்டாலோ அல்லது செழிப்பான காலங்கள் வந்தாலோ அவைகளை நல்ல நாட்ளென்று; பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கும் போதோ, வியாதியால் அவதிப்படும்போதோ அந்த நாட்களைக் கெட்ட நாட்களென்றும் வெளிப்புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்துக் கணக்கிடுகிறார்கள்.

ஆனால், நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோதுகூட நடுராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி, சந்தோஷமாய் தேவனைத் துதித்துப் பாடினார்கள் (அப். 16 : 25). எப்படி அவர்களால் அப்படிச் செய்ய முடிந்தது? சந்தோஷமாய் துதித்துப் பாடின படியால் பவுலுக்கும், சீலாவுக்கும் அது நல்ல நாளாகத்தானே இருந்திருக்கிறது. நமக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால், அது வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான அல்லது கெட்ட நாள் என்று தானே முத்திரை குத்தியிருப்போம். எனவே, மகிழ்ச்சி யான நல்ல நாட்களைத் தீர்மானிப்பது வெளிப்புறமான சூழ்நிலைகளல்ல, நம் மனநிலை தான்.

III **தீர்வு**

தேவதாசனாகிய பேதுரு ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண

வேண்டுமென்றிருக்கிறவன் என்ன செய்ய வேண்டும் என்கிற வேள்விக்குத் தீர்வாக கொடுத்திருக்கிற வேத வாக்கியம் என்னும் அருமருந்தை நாம் பயன்படுத்த வேண்டும். முதலாவது, ஒரு மனிதன் பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். நாவு என்பது ஒரு சிறிய உறுப்பாக இருந்துகொண்டு எந்த ஒரு பெரிய மனிதனையும் கட்டுப்படுத்தி விடுகிறது (யாக். 3 : 58). அது அடங்காததும், பொல்லாங்குள்ளதும் தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் மூன்றைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதாவது, நாவு சம்மந்தமாக பொய் நாவு அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருகுள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் போன்றவைகளாகும் (நீதி. 6 : 17, 9).

அடுத்ததாக, ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்ய வேண்டும். பலர், அதிலும் குறிப்பாக நாங்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட இந்த அடிப்படை உண்மையை புரிந்து கொள்ளச் சிரமப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. நாம் நன்மையானவைகளை சக மனிதர்களுக்குச் செய்யும்போது, தேவனிடத்திலிருந்து நன்மையானவைகளை எதிர்பார்க்க முடியும். கடைசியாக, பேதுரு ஆசிரியர் ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் சமாதானத்தைத்தேடி அதைப்பின் தொடரக்கடவன் என்று சொல்கிறார். இன்று, பலர் சண்டை பண்ணு கிறவர்களாக, அதையே பொழுதுபோக்காக கொண்டிருப்பவர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களிடம் சமாதானம் என்பது ஒரு பேச்சுக்குக்கூட இருக்காது. ஆனால், நாம் சமாதானத்தைத்தேடி அதைப் பின் தொடர வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

பிரியமான வாலிபர்களே, நம்மெல்லாருக்கும் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழ வேண்டுமென்றும், வாழும்போது நல்ல நாட்களைக்காண வேண்டுமென்றும் தணியாத தாகம் இருக்கும். அவைகளை நம்முடைய தாக்கிக்கொள்ள எத்தனையோ சரீர முயற்சிகளை எடுக்கிறோம். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது என்று தேவன் சொல்கிறபடியால் (I தீமோ. 4 : 8). சரீர முயற்சியை விட்டுவிட்டு, பொல்லாப்புக்கு நம் நாவையும், கபடத்துக்கு நம் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத்தேடி, அதைப்பின் தொடரும் போது, தேவன் நம் ஆயுசு நாட்களைப் பெருகச் செய்வார், வரும் உலகத்திலும் நல்ல நாட்களைக் காணும் பாக்கியத்தையும் நமக்குத் தந்தருளுவார்.

சிறுவர் பகுதி

# நல்ல பங்கு

(லூக் : 10 ; 38 - 42)

Bro. ஏபில் நாயகம்

**எ**னக்குப் பிரியமான சிறுதம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். கல்வி ஆண்டின் இறுதியை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்களா? தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் தம் அளவற்ற ஆசீர்வாதங்களினாலே நிரப்பி, ஆண்டின் இறுதித் தேர்வுகளை வெற்றி கரமாய் எழுதிமுடிக்க நிச்சயம் உதவி செய்வார். உங்கள் தேர்வுகளுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். சரி பிள்ளைகளே, நாம் இந்த மாதத்திற்கான பாடத்திற்குள் போகலாமா? வாருங்கள்.

இயேசு கிறிஸ்து இப்பூமியிலே வாழ்ந்த பொழுது பலருடைய வீடுகளுக்குச் சென்று தங்குவது வழக்கம். அப்படி ஒரு நாள் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்து, அந்த கிராமத்தில் இருந்த ஒரு வீட்டிற்குச் சென்றார். அந்த வீட்டில் இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். ஒருவன் பெயர் மார்த்தாள். மற்றொருவர் பெயர் மரியாள்.

இந்த இரண்டு சகோதரிகளில் மார்த்தாள் என்பவள் தன் வீட்டில் செய்யப்படவேண்டியதாக இருந்த பற்பல வேலைகளைச் செய்து முடித்து விட வேண்டும் என்று தன் சிந்தனையை வேலை செய்வதில் வைத்தாள். ஆனால், மரியாளோ இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து வசனத்தை கேட்டுக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த மார்த்தாள், இயேசுவிடம் வந்து மரியாளும் வீட்டு வேலை செய்ய வரும்படி சொல்ல வேண்டும் என்று கேட்டாள்.

அப்பொழுது இயேசு மார்த்தாளைப் பார்த்து, **மார்த்தாளே! மார்த்தாளே! நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்** என்று கூறினார். ஆனால், மரியாளைக் குறித்தோ **நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்** என்று கூறினார் (லூக்கா. 10 : 38 - 42).

இச்சம்பவத்திலிருந்து நாம் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். எப்படி மார்த்தாள், மரியாள் வீட்டைத் தேடி இயேசு

போனாரோ, அதைப்போல அவர் உங்களையும் என்னையும் தேடி வந்திருக்கிறார். அப்படியானால், நாம் அந்த இரு சகோதரிகளில் யாரைப் போல் இருக்கப் போகிறோம்? வீட்டிற்கு வந்த இயேசுவோடு நேரம் செலவழிக்காமல் தன் வீட்டு வேலையையும், சொந்த வேலைகளையும் பார்த்த மார்த்தாளைப் போல் இருக்கப் போகிறோமா? அல்லது மத் 6 : 33 சொல்வது போல முதலில் தேவனுக்கும் தேவ காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்த மரியாளைப் போல் இருக்கப் போகிறோமா? சொல்லுங்கள்.

நாம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், நாம் தேவ னால் மெச்சப் படவேண்டுமானால், தேவன் நம்மையும் பார்த்து **இப்பிள்ளை** நல்ல பாதையை தெரிந்து கொண்டுள்ளது என்று சொல்ல வேண்டுமானால், நம் சொந்த வேலைகளை விட, மரியாளைப் போல் தேவனுடைய காரியங்களுக்கு நாம் முதலிடம் கொடுக்க வேண்டும். அப்படி செய்தால் தேவன் நிச்சயம் நம்மை ஆசீர்வதிப்பார். சரியா? ●

---

## நாளும் நடப்பும்

- ✍ உலக சாதனை இஸ்ரோ - 104 நானோ செயற்கைக் கோள்களுடன் 15ல் விண்ணில் பாய்ந்தது.
- ✍ வங்கி சேமிப்பு கணக்குகளில் பணம் எடுக்க மார்ச் 13 முதல் எந்தக் கட்டுப்பாடும் இல்லை.
- ✍ கல்பாக்கத்தில் மேலும் இரண்டு அணு உலைகள் - மத்திய அரசு தகவல்
- ✍ தமிழகம் முழுவதும் ரூபல்லா தடுப்பூசிக்கு நல்ல வரவேற்பு.
- ✍ நவீன மருத்துவக் கண்டுபிடிப்புகள் சாதாரண மக்களைச் சென்றடைய வேண்டும்.
- ✍ இந்திய வங்கதேசம் அணிகளுக்கிடையேயான டெஸ்ட் போட்டியை இந்தியா வென்றது.

## வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் **திருமறை ஆசான்** முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் எழுதி அனுப்பவும். இதற்கான விடை மார்ச் மாத இதழில்!

1. ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்ய தேவன் எவைகளை வைத்தார் ?
2. ஏவாள் என்ற பெயரின் அர்த்தம் என்ன ?
3. மனுஷர் எப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள ஆரம்பித்தார்கள் ?
4. அதிக வருடம் வாழ்ந்தவர் யார்?
5. நோவாவின் தகப்பன் பெயர் என்ன?
6. நோவாவின் நாட்களில் மனிதரின் ஆயுசு நாட்கள் எவ்வளவு ?
7. எந்த மரத்தில் பேழையை நோவா உண்டுபண்ணினார் ?
8. யாருடைய காணிக்கையை தேவன் அங்கீகரித்தார் ?
9. யாருடைய நாட்களில் பூமி பகுக்கப்பட்டது ?
10. மாம்சத்தின் உயிர் எதிலே உள்ளது ?

ஆதியாகமத்தில் தேடி வாசித்துப் பதிலளியுங்கள்

---

### ஜனவரி மாத கேள்விக்கான பதில்கள்

1. ஆதியிலே ( ஆதி. 1 : 1 )
2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ( I யோவான் 5 : 7 )
3. வானங்கள் ( எபி. 10 : 10 – 12 )
4. ஆவியோடும் உண்மையோடும் ( யோவான் 4 : 24 )
5. அன்பில்லாதவன் ( I யோவான் 4 : 8 )
6. பரிசுத்தமாய் ( லேவி. 19 : 2 )
7. செம்மையானவனை ( சங். 11 : 7 )
8. வானங்கள் ( சங். 19 : 1 )
9. இருளில்லை ( I யோ. 1 : 5 )
10. குமாரன் மூலமாய் ( எபி. 1 : 1, 2 ).

# எல்லா சபையும் ஒன்று தானா?

Bro. டால்டன் கீ

இயேசு இந்த பூமியில் வாழ்ந்த போது " ... நான் என் சபையைக் கட்டுவேன் ... " என்று சொன்னார் (மத். 16 : 18). அவர் எதைக் கட்ட ஆர்வம் கொண்டிருந்தார் ?

கர்த்தர் ஒரு மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தை ஸ்தாபிக்க திட்டமிட்டி ருந்தாரா ? இல்லை. பிரிவு என்பதன் விளக்கம், ஒரு பெரிய தொகையில் சிறிய பங்காயிருக்கிறது. நம்மைச் சுற்றிலும் பெரிய எண்ணிக்கையில் மார்க்கப் பிரிவினை சபைகள் உள்ளன. அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் கிறிஸ்துவுக்கு விசுவாசமாக, உண்மையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் கிறிஸ்தவர்களின் உலகளாவிய அமைப்பில் ஒரு சிறு கூட்டமாக இருக்கிறார்கள். அவர்கள் விசேஷித்த உபதேசங்களால், நடை முறைகளால் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். கிறிஸ்து தாம் சபையைக் கட்டுவதாகச் சொன்னபோது மார்க்கப் பிரிவினைச் சிந்தையோடே வாக்குத்தத்தம் பண்ணவில்லை. அவர் கட்டத் திட்டமிருந்தது, மீட்கப்பட்ட ஜனங்களின் முழு எண்ணிக்கையிலிருந்து ஒரு பகுதி யை அல்ல. அது, முழுமையானதாகவே இருந்தது. லூக்காவால் எழுதிக் கொடுக் கப்பட்டிருக்கிறபடி பெந்தெகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு வந்தார்கள் (அப். 2 : 47). இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாரும் சபையில் இருந்திருந்தால், சபை யானது இரட்சிக்கப் பட்டவர்களால் ஆனதாக இருந்தால், சபை ஒரு முழுத் தொகையில் ஒரு பங்காக இருக்கும்படியாக வடிவமைக்கப்பட்டிருக்காது.

இல்லை, இயேசு தாம் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த சபை, கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டு, சரீரத்தின் தலையாகிய கிறிஸ்துவுக்கு தம்மை முழுமையாக ஒப்புக் கொடுத்த மக்களின் அமைப்பா யிருக்கிறது. ஏனென்றால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்ட வர்கள் சபையில் சேர்க்கப்படுகிறார்கள், ஒரே சரீரம் தான் இருக்கிறது (எபே. 4 : 4 ). எங்கெல்லாம், எப்போதெல்லாம் தேவனுடைய கிருபையால் சுவிசேஷத்திற்குத் கீழ்ப்படிந்து பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெறும் பரிசுத்தவான்கள் காணப்படு கிறார்களோ அங்கே சபையும் காணப்படும். கிறிஸ்துவின் தலைமைத் துவத்தின் கீழ் செயல்படும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, அதன் பணி சம்மந்தமாகவும், ஆராதனை சம்மந்தமாகவும் தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் (எபே. 5 : 24; கொலோ. 3 : 17). இயேசு கட்டின சபை ஒருமைத் தன்மை கொண்டது. அது அவருக்கு மட்டுமே உரியது.

இந்த உண்மைகளின் அடிப்படையில், " எல்லா சபைகளும் ஒன்றுதான் என்று எப்படி ஒருவரால் சொல்ல முடியும் ?"

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** மரணத்திற்குப் பிறகு மனந்திரும்புவது சாத்தியமா?

**பதில் :** இல்லவே இல்லை, மரணத்திற்குப் பிறகு மனந்திரும்புவதற்கு மார்க்கம் எதுவுமில்லை என்று தான் வேத வாக்கியங்கள் விவரிக்கின்றன. எண்ணற்ற வசனங்கள் உயிரோடிருக்கிறவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்பும்படி அழைப்பு விடுக்கின்றன (மத்தேயு 3 : 2; 4 : 17). **அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளக்கப்பண் ணினார்** (அப். 17 : 30, 31). இந்த வசனப் பகுதியில் நியாயந்தீர்ப்பு நிச்சயமான ஒன்றாக வலியுறுத்தப் பட்டிருக்கிறபடியால், மனந்திரும்புதல் என்பது நியாயத்தீர்ப்புக்கு முன்பாக, மரணத்திற்கு முன்பாக ஏற்படும் ஒரு நிகழ்வாக இருக்கிறது.

மேலும், லூக்கா 16 : 19 - 31 வசனங்களில் நாம் காணும் ஐசுவரியவான் உயிரோடிருந்த தன் சகோதரர்களின் மனந்திரும்பு தலைக்குறித்து ஆசையாயிருந்தான் என்று பார்க்கிறோம். **அதற்கு அவன் : அப்படியல்ல, தனப்பனாகிய ஆபிரகாமே மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப்போனால் மனந்திரும்புவார்கள்** என்றான் (லூக்கா 16 : 30 ). இருந்தபோதிலும் அந்த ஐசுவரியவான் தன் நித்திய நிலையை மாற்றத்தக்கதாக மரணத்திற்குப் பிறகு அவன் மனந்திரும்பும்படி அவனுக்கு வாய்ப்பு கொடுக்கப்படவே இல்லை. மரணத்திற்குப் பிறகு அந்த ஐசுவரியவானின் நித்திய நிலைமை நிரந்தரமானதென்றும், மாற்ற முடியாததெ என்றும் பார்க்கிறோம் அதுவுமல்லாமல் **இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது** என்றான் (லூக்கா. 16 : 26 ). எனவே, முதன் முதலாக பதிவு செய்யப்பட்டிருக்கிற சுவிசேஷப் பிரசங்கத்தின் நிறைவுக் கருத்தே ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தீவிரமாக மனந்திரும்ப வேண்டுமென்பதாயிருக்கிறது. **பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்** " (அப். 2 : 38) என்றான்.

# மறைவானவைகள் தேவனுக்குரியவைகள்

Bro. பாண்டியன்

**அ**ன்பின் தேவ பிள்ளைகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நம்முடைய வாழ்க்கையில் நடைபெறும் சில காரியங்கள் ஏன் என்று நாம் அதிர்ச்சியடையுமளவுக்குக் கூட இருப்பது உண்டு. சமுதாயத்தில் காணும் அநேக விஷயங்களுக்கு அடிப்படைக் காரணங்கள் நமக்குப் புரிவதில்லை. நம்மை ஆளுகிற அதிகாரிகளின் செய்கைகளும் பல நேரங்களில் நாம் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. இப்படி அநேக விஷயங்கள் மனிதனின் அறிவுக்கு எட்டாமல் நடக்கின்றது. ஆனால், உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேதம் எல்லாவற்றிற்குமான பதிலைக் கொண்டுள்ளது. – உபாகமம் 29 : 29 ல் நாம் இவ்வாறு காண்கிறோம் ; – **மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.** ஆக, சில காரியங்களை தேவன் மறைவாக வைத்திருக்கிறார் என்று காண்கிறோம். அதற்கு வேதம் இரண்டு காரணங்களைக் கூறுகிறது. ஒன்று தேவன் தம்முடைய மேன்மையை மனிதகுலம் உணர்ந்து கொள்ள அப்படி வைத்திருக்கிறார். **காரியங்களை மறைப்பது தேவனுக்கு மேன்மை; காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை** ( நீதி 25 : 2 ). உதாரணமாக மனிதன் அனுபவிக்கும் வைரம், நிலக்கரி, எரிவாயு, பெட்ரோல், பொன், வெள்ளி, இரும்பு போன்றவை இந்த பூமியில் மறைவாக வைக்கப்பட்டிருக்கிறது. மனிதன் தன் பெரு முயற்சியினால் இவற்றை எடுக்கிறான். ஆனால் தேவன் **பூமியும் அதின் நிறைவும் என்னுடையது** என்று சொல்லுகிறார். அதே வண்ணமாய் நாம் காண்கின்ற சந்திரன், சூரியன் நட்சத்திரங்கள் தவிர நாம் காணக் கூடாத அநேகக் கோள்களும், கிரகங்களும் இருப்பதாக. மனிதன் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறான். ஆனால், **வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியைகளை அறிவிக்கிறது** என்று சங்கீதக்காரன் கூறுகின்றார் (சங். 19 : 1). அப்படி போல

மனுஷருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் அநேகக் காரியங்கள் மறைவானதாக இருக்கின்றது. அதைக் குறித்து ஞானியாகிய சாலமோனின் வார்த்தைகளில் அநேக விஷயங்களைக் காண்கின்றோம். தன் காலத்தை மனுஷன் அறியான்... சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள் – பிரசங்கி 9 : 12 – இன்றைய நாட்களில் நாம் வீட்டை விட்டு வெளியில் சென்று பின்பு வீடு திரும்புவதே பெரிய சவாலாக உள்ளது? அந்த அளவுக்கு சாலையில் போக்குவரத்து நெருக்கடியைக் காண்கின்றோம்.தனக்கு பின் வரும் காரியங்களைக் காணும்படி யாரும் அவனைத் திரும்பிவரப்பண்ண முடியாது என்றும், இன்னது சம்பவிக்கும் என்று அவனும் அறியான், அது இன்னவிதமாய் சம்பவிக்கும் என்று ஒருவனாலும் சொல்லவும் கூடாது என்றும் பிரசங்கி வெளிப்படுத்துகிறார் (பிர. 3 : 22, 8 : 7). எனவே, மனிதன் நம்பும் ஜோசியம், ஜாதகம், ஆருடம், குறி சொல்லுதல் அனைத்துமே போலியானது என்று தேவனுடைய வார்த்தை எச்சரிக்கிறது. (எண் 23 : 23).

பாவஞ்செய்கிற மனிதன் தான் அதை ஒருவருக்கும் தெரியாமல் செய் வதாக எண்ணிச் செய்கிறான். I தீமோ 5 : 24 ல் " சிலருடைய பாவங்கள் நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொண்டு வெளியரங்கமாகும் என்று, காண்கிறோம். ஆனால், தேவனுக்கு சகலமும் வெளியரங்கமாயிருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. எனவேதான் தாவீது **மறைவான பாவங்களுக்கு என்னை நீங்கலாக்கும்** என்று தேவனிடம் வேண்டிக் கொள்வதைப் பார்க்கிறோம் ( சங் 19 : 12 ) " தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து, தங்கள் கிரியைகளை காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ " ! என்று ஏசாயா ( 29 : 15 ) கேட்கிறார். எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக்கூடுமா? என்று கர்த்தர் சொல்லுகிறார் என்கிறார் எரேமியா (23 : 24) அதையே எபி 4 : 12 ல் அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை என்று கூறப்பட்டுள்ளது. நம் தேவன் நம் நெருக்கத்திலே, இடி முழக்கம் உண்டாகும் **மறைவிடத் திலிருந்து உத்தரவு** அருளுகிறவர் (சங் 81 : 7) மாம்சக் கண்களினால் அவரைக் காண முடியாவிட்டாலும் அவர் உண்டாக்கின உலகம் மற்றும் இயற்கையின் மூலம் மனுஷருக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக மனுஷர் கண்டிராத அந்த வல்லமையுள்ள தேவனை வெளிப்படுத்தவே அவருடைய குமாரன்

கிறிஸ்து இயேசு வந்தார் என்று வேதாகமத்தின் சாராம்சம் (யோவான் 1 : 18). இரண்டாம் வருகையில் அவரே நம் நியாயாயதிபதி, நாம் அவருக்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

கிறிஸ்து தம்முடைய மரணத்தைக் குறித்து முன் கூட்டியே தம் சீஷர்களுக்கு அறிவித்த போது அது அவர்களுக்கு உணரமுடியாத மறை பொருளாய் இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது (லூக் 18 : 34). இயேசு தமது கொடிய மரணத்தை முன்னமே அறிந்தது போல் அப்போஸ் தலனாகிய பவுலுக்கு அறிய முடியவில்லை. எனவே **எருசலேமுக்குப் போகிறேன் ; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்** என்கிறார் (அப் 20 : 22). தம் சீஷர்களுக்கு ஆண்டவர் உபதேசித்தபோது இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய தாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள் (யோவா 16 : 12) என்றார். இது ஒருவேளை அவை சபை ஆரம்பிக்கப்பட்ட பின்பு எழும்பிய அநேகப் பாடுகள், பிரச்சனைகளைக் குறித்ததாக இருக்க லாம். எனவே, மறை வானவைகள் தேவனுக்குரியதாயிருக்கிறது. அப்ப டியே தாழ்மை பற்றிய பாடத்தை உணர்த்த ஆண்டவர் தம் சீஷர்களின் கால்களைக் கழுவினார். அதைத் தடுக்க முயன்ற பேதுருவிடம்; நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார் (யோவா 13 : 17 ). இந்தப் பாடத்தை நிச்சயம் பேதுரு தன் இருதயத்தில் வைத்ததால் பிற்பாடு இவன் முதல் பிரசங்கத்தில் சபை ஆரம் பிக்கப்பட்ட போது சரி, பிற்பாடு எட்டு வருஷமாய் திமிர்வாதமாய் இருந்த ஐனேயாவை சுகப்படுத்திய போதும் சரி, உச்சகட்டமாக மரித்துப்போன தபீத்தாளை உயிரோடு எழுப்பிய போதும் கூட அவன் தன் இருதயத்தில் பெருமைப்பட வாய்ப்பின்றிப் போனதற்குக் காரணம்? தன் காலைத் தொட்டுக் கழுவிய ஆண்டவரின் தாழ்மைப் பாடமே! அதை அப்போது அவன் அறியவில்லை. ஒருவேளை நம்முடைய வாழ்க்கையிலும் நாம் சந்திக்கும் அதிர்ச்சிகள், பிரச்சனைகளை தேவன் நமக்குப் பிரயோஜனமாக நம்முடைய மேன்மைக்காக அவைகளைப் பயன் படுத்துவார். இக்காலத்துப் பாடுகள் நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்று பவுல் ரோமர் 8 : 18 ல் குறிப்பிடுகிறார்.

சபையிலிருக்கும் விசுவாசிகளாகிய நமக்கு நம் எதிர்காலம் அல்லது பரலோகம் பற்றியதான பார்வை குறைவாவுள்ளது. இப்பொழுது கண்ணா டியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முக முகமாய்ப் பார்ப் போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துக்கொள்வேன் ( I கொரி 13 : 12 ) நாம்

உலக மக்களைப் போல் நம் எதிர்காலத்தைப் பற்றி பெருமை பாராட்டக் கூடாது. நீதி 27 : 1 ஏனெனில், ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே. இதைத்தான் யாக்கோபு ஆசிரியர் புதிய ஏற்பாட்டில் நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே – உங்கள் ஜீவன் கொஞ்ச காலம் தோன்றி பின்பு காணப்படாமல் போகிற புகைக்கு ஒப்பாக இருக்கிறது. எனவே, “ ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் இன்னின் னதைச் செய்வோம் ” என்றுச் சொல்லிப் பழகச் சொல்லுகிறார். இந்தத் தெளிவு இல்லாமல் தான் உலக மக்கள் தற்கொலை போன்ற விபரீதமான தேவனுக்கு விரோதமான – முடிவுகளை நாடிச் செல்கிறார்கள். யோவான் தம்முடைய முதலாம் நிருபத்தில் குறிப்பிடும் போது – இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்; இனி எவ்விதமாய் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை என்கிறார்.

நம்முடைய தலைப்பு வசனத்தில் மறைவானவைகள் தேவனுக்குரியது என்றும் வெளிப்படுத்தப்பட்டவை நமக்கு உரியது என்றும் பார்த்தோம் வெளிப்படுத்தப்பட்டவை என்பது தேவனுடைய வார்த்தைகளைக் குறிக் கிறது. அதையே பவுல் அப்போஸ்தலன் **எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணா திருங்கள்** என்கிறார் ( I கொரி 4 : 6) சபை ஆரம்பிக்கும் முன்பு கிறிஸ்து தம் ஊழியத்தில் **என் வாயை உவமைகளினால் திறப்பேன். உலக தோற்ற முதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன்** என்று குறிப்பிடப் பட்டுள்ளது ( மத் 13 : 35 ). நேபுகாத் நேச்சாரின் கனவு மறைபொருளா யிருந்த போது அதை தானியேல் மூலம் தேவனே வெளிப்படுத்தினார். (தானி 2 : 19 – 23). நமதாண்டவர் பிறந்த போது அவரைக் கைகளில் ஏந்திய சிமியோன், அநேகருடைய சிந்தனை வெளிப்படுத்தக்கதாக இயேசு வந் திருப்பதாகக் குறிப்பிட்டார். லூக் 2 : 34. மனுஷர் உள்ளத்திலிருப்பதை எல்லாம் இயேசுவானவர் அறிந்திருந்தார். அதனால்தான் மறைந்து வேடிக்கை பார்த்த சகேயுவை பெயர் சொல்லி அழைத்தார். பாவியாகிய ஸ்திரீ ஆண்டவரின் கால்களைக் கண்ணீரினால் கழுவிய போது அதைத் தப்பாக எண்ணிய சீமோன் என்னும் பரிசேயனின் தவறை உணர்த்தினார். இன்னும், தண்ணீரில் மீனின் வாயில் மறைந்திருந்த வெள்ளிக் காசை பேதுருவுக்குக் காண்பித்தார். தாம் பிதாவிடமிருந்து பெற்ற உபதே சத்தையெல்லாம் தம் சீஷர்களுக்கு வெளிப்படுத்தியதால் அவர்களை சிநேகிதர்கள் என்றார். வேதபாரகர் பரிசேயரை மாயக்காரனே என்று கடிந்து கொண்டார். புறம்பே நீதிமான்களாக, உள்ளே அக்கிரமக்காராக இருப் பதைக் கண்டித்து உணர்த்தினார். மனுஷர் மத்தியில் இயல்பாகக் காணப்பட்ட தற்பெருமை, தன்னை ஞானி என்று எண்ணுதல், மற்றவரைக் குற்றவாளி

எனத் தீர்ப்ப தரித்திரரை நிந்திப்பது போன்ற அநேகக் காரியங்களை மக்களுக்கு உணர்த்தினார். அது மாத்திரமல்ல, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்றிருந்த காலத்தில், தீமையோடு எதிர்த்து நிற்காதே, சத்துருவை சிநேகி, உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களை நிந்திகக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காக வும் ஜெபம் பண்ணுங்கள் என்பது போன்ற மனுஷனுடைய கற்பனைக் கெட்டாத புரட்சிகரமான உபதேசங்களைக் கிறிஸ்துவானவர் வெளிப்படுத் தினார். அவைகள் நாம் தெரிந்து கொள்வதற்காக மட்டுமல்ல அதின்படி செய்ய முன்வரவேண்டும் என்பதே பிதாவின் சித்தமாயிருக்கிறது. ஆனால், சிலர் இவைகளை விட்டு வேதத்தில் சொல்லப்படாத காரியங்களைக் குறித்து தேவையற்ற விவாதங்கள் செய்கிறதைக் காண்கிறோம். அவர்கள் வீண் பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப் போனார்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார். (I தீமோ 1: 6, 7). சபையில் இருந்து **பிதாவின்சித்தம் செய்பவர்களே** பரலோ கத்தின் ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பார்கள். வெறுமனே கர்த்தாவே, கர்த்தாவே என்பவர்களை, என்னை விட்டு அகன்று போங்கள் என்று ஆண்டவர் விலக்கிவிடுவார். சபை மக்களுக்காக தேவன் ஆயத்தம் பண்ணி வைத்தி ருக்கிறதை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது **ஆவியினாலே** வெளிப்படுத்தினார் (1 கொரி. 1: 9, 10) என்று காண்கிறோம். இங்கு ஆவியினாலே என்ற வார்த்தை அநேக பிரிவினைச் சபைகளின் தப்பான அர்த்தங் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் 2 தீமோ 3 : 16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ **ஆவியினால்** அருளப்பட்டிருக்கிறது என்று காண்கிறோம். ஆகவே அன்பு சகோதர சகோதரிகளே நாம் கைக்கொள்ளும்படி ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத் திற்கு நாம் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்து நம்முடைய பிள்ளைகளும் அதில் நடக்கும் படி வழி நடத்துவோம். தேவகிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக..

ஆமென்

---

## யோவான் 1 ம் அதிகாரத்தில் கிறிஸ்து

- வார்த்தை (1 : 1)
- ஒளி (1 : 9)
- இயேசு கிறிஸ்து (1 : 17)
- ஒரே பேறான குமாரன் (1 : 18)
- தேவ ஆட்டுக்குட்டி (1 : 29, 36)
- தேவனுடைய குமாரன் (1 : 34, 49)
- ரபீ – போதகர் (1 : 38, 49)
- மேசியா – கிறிஸ்து (1 : 41)
- யோசேப்பின் குமாரன் (1 : 45)
- நாசரேத்தூரானுமாகிய இயேசு (1 : 45)
- இஸ்ரவேலின் ராஜா (1 : 49)
- மனுஷ குமாரன் (1 : 50)

# தேவனை மகிமைப்படுத்துங்கள்

Bro. தாமஸ் ஆர். டாக்லிங்

**... நான் என் பிதாவை கனம் பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கன வீனம் பண்ணுகிறீர்கள், நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்** (யோவான். 8 : 49 – 50).

தேவனை உலகிற்குக் காண்பிக்கவே. இயேசு புவியில் வெளிப்பட்டார். இயேசு, பிதாவுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்தார், இருக்கிறார். இப்பூலோகத்தில், இருந்தபோது, தன் பிதாவை கனம் பண்ணவும் அவரையே மகிமைப்படுத்தவும், நாடினார். அவர் தனக்கென்று மகிமையைத் தேடவில்லை. அவர் அப்படி தேடியிருந் தால் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷச் சாயலாயிருக்கமாட்டாரே (பிலி 2 : 7) மேலும், அடிமையின் சின்னமாகிய சிலுவையின் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தி, கீழ்ப்படிந்திருக்க வேறு காரணம் ஒன்றுமில்லையே. சிலுவையில் அறைந்து கொல்லுதல் ஒருவரையும் மகிமைப்படுத்தவில்லை. மாறாக அது அறையப்பட்டவனை சாபமாக்கிற்று (உபா 21 : 23) சிலுவை ஒருவனின் அடிப்படை குணாதி சயங்களைக் காண்பிக்கிறது. மகிமைக்குப் பாத்திரமாயிருந்து அதை எதிர்பார்க்கிற பிதாவை மகிமைப்படுத்த வேண்டும் என்று பாவமில் லாதிருந்த, இயேசு தன் மகிமையைத் துறந்து இந்த கோர மரணத்தின் சாயலை ஏற்றுக் கொண்டார். அவர் தன் பிதாவின் சித்தத்திற்கு முழுமையாய் தன்னை அர்ப்பணித்தார்.

தேவன் மகிமைக்கு உரியவராய் இருக்கிறபடியால் அதை எதிர்பார்க் கிறார். இயேசு, தேவனை மகிமைப்படுத்துவதில், தவறு ஏதும் காண வில்லை. தேவனை துதிக்கும்படி, கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார். எல்லாப் படைப்பும் அவரை மகிமைப்படுத்துகிறது. நாம் ஏன் மகிமைப் படுத்தக்கூடாது? தேவன் எதிர்பார்ப்பதால் அவரை மகிமைப் படுத்துவதில் நாம் வெட்கப்படாதிருப்போமாக. அவரை மகிமைப்படுத்தினால் கிறிஸ்து வெளிப்படும் காலத்தால் நம்மை மகிமைப்படுத்துவார் (ரோமர் 8 : 18).

எல்லா வழிகளிலும் அவரை எப்பொழுதும் மகிமைப்படுத்த இப்பொழுதே தீர்மானம் செய்வோம். ●

# சிலுவையின் வல்லமை

Bro. பிக் நிக்ஸ்

கிறிஸ்துவின் சிலுவை எப்பொழுதும் இடறுதலுக்கேதுவானதாகவும், விழுதற்கேதுவான கன்மலையுமாயிருக்கிறது (1பேதுரு 2 : 8, 1கொரி 1 : 23).

சிவவை மரத்தில் அறையப்பட்டுத் தொங்கிய ஒருவர் எப்படி மேசியாவாக இருக்க முடியும் என்று யூதர்கள் தாக்கம் செய்கிறார்கள். (உபாகமம் 21 : 23 ; கலாத்தியர் 3 : 13 ). ரோமர்களால் குற்றவாளி என்று தீர்க்கப்பட்டு சிலுவை யில் மரித்த ஒருவரை எப்படி மனித குலம் ஆராதிக்க முடியும்? என்று பிற மக்கள் வினவுகிறார்கள். ஆனால், பரிசுத்த பவுல் **நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிபடிக்கு பாவம் அறியாத அவரை பாவமாக்கினார் என்று வலியுறுத்திச் சொல்கிறார்.** (2 கொரி 5 : 21).

இயேசுவின் தியாகத்தால் **சிலுவை** என்னும் சொல் மற்ற எல்லா வார்த்தை களை விட பரவலாக அறியப்பட்டுள்ளது. அது மனிதனின் அறியாமை யையும் பாவத்தின் கொடுமையையும் காட்டுகிறது. அவர் யார் என்று அறிந்திருந்தால் அதிகாரிகளும், இந்தப் பிரபஞ்சத்துப் பிரபுக்களும் அவரை - மகிமையின் ஆண்டவரை, சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள் (அப். 3 : 17, 1கொரி 2 : 8). மக்களின் அறியாமையை அவரது சிலுவை மரணம் காண்பித்தாலும், அது தேவ அன்பும் இரக்கமும் எத் தகையது என்பதையும் படம் பிடித்துக் காட்டுகிறது (ரோமர் 5 : 8).

கிறிஸ்துவின் சிலுவை என்பது

- வரலாற்றிலே அது மிகவும் சோகமான ஒன்று. ஆனால், அதியற்புதமானது.
- கண்ட காட்சிகளில் மிக வருத்தமூட்டும் காட்சி. ஆனால், அது மிக அதிகமாக மகிழ்ச்சியை உண்டாக்கிற்று.
- சாத்தானின் மாபெரும் வெற்றியும், கிறிஸ்துவின் அதிர்ச்சியடையத் தக்க தோல்வியுமாகத் தெரிந்தாலும் சாத்தானின் மிகப்பெரிய

தோல்வியும், கிறிஸ்துவின் மிக மகிமை பொருந்திய வெற்றியுமாயிருக்கிறது.

- ❊ கிறிஸ்து தம் மரணத்தினாலே வெற்றியும், தம்மை ஒப்புக் கொடுத்த தினாலே ஜெயமும் பெற்றார்.
- ❊ தேவ நீதி பாவத்தை மாம்சத்தில் ஆக்கினைக்குட்படுத்தியது. ஆனால், அவரின் இரக்கத்தினால் பாவத்தை மன்னித்தார்.
- ❊ மனிதனின் பார்வையில் அது ஒரு மதியீனமானது. ஆனால், அது தேவ ஞானத்தின் உயர்ந்த வெளிப்பாடு (கலா 6 : 14, 2 : 20).

**இரத்தம்** என்பது கண்ணியத்துக்குரியதொன்றல்ல என்று தற்கால பிரசங்கி ஒருவர் சொன்னார். எனவே, அவர்களின் எல்லாப் பாடல்களிலும் **இரத்தம்** என்ற சொல்லை நீக்கி விட்டனர். அவர்கள் இரத்தத்தில் தான் மீட்கும் வல்லமை இருக்கிறது என்று நம்பாமல் போனார்கள். அதைக் கேட்ட ஒருவர் **இரத்தத்தைக் குறித்து நான் வெட்கப்படமாட்டேன். எனது தாய் என்னையும் என் சகோதரனையும் காப்பாற்ற இரயில் பாதையில் இருந்த எங்களைத் துரத்திவிட்டு தான் மரித்தார். அவளது ரத்தம் அந்த பகுதியிலும், இரயில் பாதையிலும் சிந்தப்பட்டது. அவர் தமது விலையேற்றப்பட்ட இரத்தத்தை எங்களைக் காப்பாற்றச் சிந்தினாரே.**

**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேற்றப்பட்ட இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே** (1 பேதுரு 1 : 19).

கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமையுண்டு. வேதம் அவ்வாறு கூறுவதினால் நான் அதை அறிந்திருக்கிறேன் (மத். 26 : 28, 20 : 28, அப். 2 ; 38, எபி. 2 : 9 ) **மிருகங்களின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாதே** (எபி 10 : 1 – 4, 9 : 12). மிக மோசமான ஒரு மனிதன் கூட கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினாலே மீட்கப்பட முடியும். (கொலோ 1 : 20 – 22, எபே 2 : 3 – 6).

நமது ஆண்டவரின் சிலுவை மரணம் எதிர்பாராமல் நடைபெற்ற ஒரு சம்பவமல்ல. அது முன்னறிந்து சொல்லப்பட்டதும், பஸ்கா ஆட்டுக்குட்டி மூலம் மாதிரியாகக் காண்பிக்கப்பட்டதுமாகும். (யாத் 12, யோவான் 1 : 29, ஏசாயா 53 : 7 – 12; மத். 8 : 17, அப். 8 : 32).

**அவருடைய மரணத்தினாலே கீழ்க்கண்ட காரியங்கள் நிறைவு பெற்றன.**

1. அவர் தேவ ராஜ்யமாகிய திருச்சபையைக் கிரயத்துக்கு கொண்டார். (அப். 20 : 28)

2. தமக்குள் யூதர்களையும், கிரேக்கர்களையும் ஒப்புரவாக்கிக் கொண்டார் (எபே. 2 : 16)

3. பாவத்திலிருந்து மீட்பை செய்து முடித்தார் (1 யோவான் 2 : 1, 4 : 10).

4. பழைய உடன்படிக்கையை நீக்கிப்போட்டு புதியதை ஏற்படுத்தினார் (எபி 9: 15, 17, மத்தேயு 26 : 28, எபி 13 : 20).

5. சாத்தானின் வல்லமையை அழித்துப்போட்டார். (எபி. 2 : 14, 1 யோவா 3 : 8).

6. அடிமைத்தனத்தினால் மரணத்துக்கேதுவான மனுக்குலத்தை விடுதலை பண்ணினார். (எபி. 2 : 15)

எல்லோருக்கும் இரட்சிப்படைய வாய்ப்பு ஏற்பட்டது. ஆனாலும், சிலர் இரட்சிப்பை தள்ளிவிடுவதாலும், புறக்கணிப்பதாலும் எல்லாரும் இரட்சிக்கப்படுவதில்லை (எபிரெயர் 2 : 3, 4).

பழைய ஏற்பாட்டிலே கூறப்பட்ட நாகமான் போல சிலர் தாங்களாகவே சிலவற்றை எதிர்பார்த்து முன்னதாக தாங்களே முடிவு செய்து கொள்ளுகி றார்கள் ( 2 இராஜா 5 : 1 – 14 ). எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என தேவன் விரும்புகிறார் ( 2 பேது 3 : 9 ). ஆனாலும், அவர்கள் **இடுக்கமான வாசல்** வழி நுழைந்து **குறுகலான பாதை** வழியே சென்றாக வேண்டும். (மத். 7 : 13).

நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் நாம் செய்வ தெல்லாம் சிலுவையைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். அது மன்னிப்புக்கான நிபந்தனை, ஆராதனை, அன்றாட வாழ்க்கை முறை என எதுவாயினும் சரி, நமது பாதையை நாமே தெரிந்து கொள்ள முடியாது. நமது நடவடிக்கையை நாமே தெரிந்து கொள்ள முடியாது.

**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்** என்று இயேசு சொன்னார். (யோவான் 14 : 6 ). கிறிஸ்துவின் வழி யாதெனில் அது சிலுவையின் வழியே.